Dr. Iruthayaraj
VP
ST. JOSEPH'S COLLEGE
25 SEP 2025
TIRUCHIRAPPALLI-620 002

கல்லூரிக் கல்வி துறை

அனுப்புநர்

எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப.,
கல்லூரிக் கல்வி ஆணையர்
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சென்னை – 15

பெறுநர்

1.முதல்வர்கள்
அரசு கல்லூரிகள்
2.முதல்வர்கள்
அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி
கல்லூரிகள்(மண்டலங்கள் வழியாக)

ந.க.எண். TNDCE/7077/2025-M2 – 1 நாள்.24–09–2025

பொருள்: கல்லாூரிக் கல்வித் துறை – "கல்வியில் சிறந்த தமிழ்நாடு" – 25.09.2025 அன்று மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் விழாவின் நேரடி ஒளிபரப்பு(live Streaming) – கல்லூரி மாணவர்கள் பங்கேற்கச் செய்தல் – தொடர்பாக.

பார்வை: சென்னை – 09 , அரசு கடித எண்.2054/ஜி1/2025–2, உயர்கல்வி(ஜி1)த் துறை, நாள். 23.09.2025

------

கல்வித் துறையில் மாநில அரசு செயல்படுத்தி வரும் சாதனைகள், பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் பலன்களை மக்கள் மத்தியில் எடுத்துரைக்கும் வகையிலும், சிறந்த மாணாக்கர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி செயல்பாட்டாளர்களுக்கு பாராட்டு வழங்கவும், புதுமையான கல்வித் திட்டங்கள், டிஜிட்டல் கற்றல் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தும் வகையிலும், மாணாக்கர்களுக்கான கல்வித்திட்டங்களான நான் முதல்வன், முதல்வரின் காலை உணவு திட்டம், புதுமை பெண், தமிழ் புதல்வன் ஆகிய திட்டங்கள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், கல்வியில் சிறந்த தமிழ்நாடு நிகழ்ச்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 25.09.2025 அன்று மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரை சென்னை, நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற உள்ள இந்நிகழ்வை நேரடி ஒளிபரப்பு(live Streaming) செய்து அனைத்து கல்லூரி மாணவர்களையும் பங்கேற்க செய்யுமாறும், கல்லூரி மாணவர்களின் பாதுகாப்பினை சரியான முறையில் உறுதி செய்திடுமாறும் அனைத்து கல்லூரி முதல்வர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.